<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 21/2024**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய ராஜ்குமார் **PW2.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 20.03.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ராஜ்குமார் | | |
| Father /Husband Name | : | சுப்ரமணியன் | Court | : |
| Village | : | கிராம நிர்வாக அலுவலர், ஆக்கூர் பண்டாரவாடை | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 46/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் நத்தம் நில வரி துாய சிட்டா மற்றும் அடங்கல் நான் வழங்கியது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த சிட்டா **சா.சா.ஆ. 1** ஆகவும் அடங்கல் **சா.சா.ஆ 2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.